**செய்தி வெளியீடு எண்:222** **நாள்:04.06.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (4.6.2021) தலைமைச் செயலகத்தில், விருதுநகர் அரசு மருத்துவமனை அருகிலுள்ள கே.வி.எஸ்.நூற்றாண்டு பள்ளி வளாகத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள 200 ஆக்சிஜன் படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

விருதுநகர் மாவட்டத்தில் கொரோனா தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 417 படுக்கைகள், 4681 சாதாரண படுக்கைகள் மற்றும் 52 தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகள், என மொத்தம் 5150 படுக்கை வசதிகள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 27 கொரோனா சிகிச்சை மையங்களில் ஏற்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், கொரோனா சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் 334 ஆக்சிஜன் படுக்கைகள், 415 சாதாரண படுக்கைகள் மற்றும் 365 தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகள், என மொத்தம் 1114 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், விருதுநகரிலிருந்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. தனுஷ் எம். குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், திரு.எஸ்.தங்கபாண்டியன், திரு.ஏ.ஆர்.ஆர். ரகுராமன், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இரா.கண்ணன், இ.ஆ.ப., ஆகியோரும், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டார்கள்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**